# பிறர் நம்மோடும், நாம் பிறரோடும் பேசும்போது கவனிக்க வேண்டியவைகள்

Pr. K.Joseph

**சங்-19: 14** *என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக.*

**எபே-4: 28** *கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்த புறப்படவேண்டாம்.*

1. **பிறரைக் குறித்த குறைகள் வெளிப்படுகிறதா?** (அவர் அப்படிச் செய்துவிட்டார், இப்படிச் சொல்கிறார் என்று பேசுவது)
   ஒரு நபர் இல்லாதபோது அவர்களைக் குறித்து தீமையாகப் பேசுதல், அவதூறாகப் பேசுதல், இல்லாதது பொல்லாதது சொல்லுதல், அவப்பெயரைப் பரப்புதல் போன்ற இவைகள் தேவனுடைய பார்வையில் அருவருப்பானதாக இருக்கிறது.

   **ஆரோனும் மிரியாமும்:**
   **எண்-12: 1,2** *எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயை மோசே விவாகம்பண்ணியிருந்தபடியினால், மிரியாமும், ஆரோனும் அவன் விவாகம்பண்ணின எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயினிமித்தம் அவனுக்கு விரோதமாய் பேசி: கர்த்தர் மோசேயைக்கொண்டு மாத்திரம் பேசினாரோ, எங்களைக்கொண்டும் அவர் பேசினதில்லையோ என்றார்கள். கர்த்தர் அதைக் கேட்டார்.*

2. **தன்னைக் குறித்த பெருமைகள் வெளிப்படுகிறதா?** (நான் நான் என்று தன்னைக் குறித்தே பேசுவது)

   **பரிசேயன்:**
   **லூக்-18: 11-12** *பரிசேயன் நின்று: தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன்ஞு என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன் என்று, தனக்குள்ளே ஜெபம்பண்ணினான்.*

3. **மனமடிவை உண்டாக்குகிறதா?** (அதிருப்தி, அவிசுவாசம், பயம், விரக்தி, நம்பிக்கை இழப்பு, ஆதங்கம், பிரிவனைஈ வாக்குவாதம், சோர்வு)

   **தொபியாவும் சன்பல்லாத்தும்:**
   **நெகே-4: 1-5** *நாங்கள் அலங்கத்தைக் கட்டுகிற செய்தியைச் சன்பல்லாத் கேட்டபோது, அவன் கோபித்து, எரிச்சலடைந்து, யூதரைச் சக்கந்தம்பண்ணி: அந்த அற்பமான யூதர் செய்கிறது என்ன, அவர்களுக்கு இடங்கொடுக்கப்படுமோ, பலியிடுவார்களோ, சுட்டெரித்துப் போடப்பட்டு மண்மேடுகளான கற்களுக்கு உயிர் கொடுப்பார்களோ, என்று தன் சகோதரருக்கும் சமாரியாவின் சேனைக்கும் முன்பாகச் சொன்னான். அப்பொழுது அம்மோனியனாகிய தொபியா அவன் பக்கத்தில் நின்று: அவர்கள் கட்டினாலும் என்ன, ஒரு நரி ஏறிப்போனால் அவர்களுடைய கல்மதில் இடிந்துபோகும் என்றான். எங்கள் தேவனே, நாங்கள் அவமதிக்கப்படுகிறதைக் கேட்டு, அவர்கள் நிந்திக்கிற நிந்தையை அவர்கள் தலையின்மேல் திருப்பி, அவர்களைச் சிறையிருப்பின் தேசத்தில் சூறைக்கு ஒப்புக்கொடும். அவர்கள் அக்கிரமத்தை மூடிப்போடாதேயும். அவர்கள் பாவம் உமக்கு முன்பாகக் கொலைக்கப்படாதிருப்பதாக, கட்டுகிறவர்களுக்கு மனமடிவுண்டாகப் பேசினார்களே.*

4. **பரிசுத்தக் குலைச்சலை ஏற்படுத்துகிறதா?** (வசீகரித்தல், மயக்குதல், ஆசைகாட்டுதல், இச்சையைத் தூண்டிவிடுதல், தீமைசெய்ய வழிநடத்துதல், கோபம், வெறுப்பு)

**போத்திபாரின் மனைவி:**

**ஆதி–39: 7,10** *சிலநாள் சென்றபின், அவனுடைய எஜமானின் மனைவி யோசேப்பின்மேல் கண்போட்டு, என்னோடே சயனி என்றாள். அவள் நித்தம் நித்தம் யோசேப்போடே இப்படிப் பேசிக்கொண்டு வந்தும், அவன் அவளுடனே சயனிக்கவும் அவளுடனே இருக்கவும் சம்மதிக்கவில்லை.*

**“பிறர்” என்பது யாரைக் குறிக்கிறது?**

நாம் அல்லாத எல்லாருமே பிறர்தான். உங்கள் கணவர், மனைவி, தகப்பன், தாய், சகோதர–சகோதரிகள், உறவினர்கள், நண்பர்கள், பகைவர்கள், தலைவர்கள், அதிகாரிகள், முதலாளி, தொழிலாளி, மாமனார், மாமியார், நாத்தனார், கொழுந்தனார், விசுவாசிகள், ஊழியர்கள், பக்கத்துவீட்டுக்காரர்கள், வழிப்போக்கர்கள்)

**மத்தேயு–12: 36** *மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

**நம்முடைய வார்த்தைகளை நிதானித்துப் பார்த்திட உதவுபவைகள்:**

1. பிறருக்கு பக்திவிருத்தி உண்டாக்குகிறதா?
2. தேவனை மகிமைப்படுத்துகிறதா?
3. தேவனோடும் மற்றவர்களோடும் பிறரை ஒப்புரவாக்குகிறதா?

**பிறரைக் குறித்துப் பேசியே ஆகவேண்டும் என்று விரும்பினால்:**

அவர்களைக் குறித்த நன்மைகளைப் பிறரிடம் பேசுங்கள்
அவர்களைக் குறித்த தீமைகளை அவர்களிடமே பேசுங்கள்
அவர்களைக் குறித்த தீமைகளிலிருந்து அவர்கள் விடுவிக்கப்பட தேவனிடம் பேசுங்கள்

**நாம் பேசிய வார்த்தைகளை ஆராய்ந்து பார்த்தல்:**

1. இன்று நான் **யார்யாரோடு** பேசினேன்?
2. இன்று நான் **யார்யாரைக்** குறித்துப் பேசினேன்?
3. இன்று நான் **பிறரைக்** குறித்து **என்னென்ன** பேசினேன்?
4. இன்று நான் **என்னைக்** குறித்து **என்னென்ன** பேசினேன்?

**என்னுடைய வார்த்தைகள்**

தேவனுக்கு மகிமையைக் கொண்டுவந்ததா?
பிறருக்குப் பக்திவிருத்தியைக் கொண்டுவந்ததா?
சாத்தானுக்கு வெட்கத்தைக் கொண்டுவந்ததா?

**சங்–34: 13** *உன் நாவைப் பொல்லாப்புக்கும், உன் உதடுகளைக் கபட்டுவசனிப்புக்கும் விலக்கிக் காத்துக்கொள்.*